එච්. එම්. විජිත හේරත්, පා. ම.
எச். எம். விஜித ஹேரத், பா. உ.
**H. M. Vijitha Herath, M. P.**
විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍ය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்
**Minister of Foreign Affairs, Foreign Employment and Tourism**

# சுதந்திர தினச் செய்தி – 2026

இலங்கை வரலாற்றில் தீர்க்கமானதொரு தருணத்தில், நமது நாட்டின் எதிர்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும், 78வது தேசிய சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், உள்நாட்டிலும், உலகெங்கிலும் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் எனது சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திர தினம் என்பது, நமது சாதனைகளைக் கொண்டாடுவதற்கான நேரம் மட்டுமல்ல, நாம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் எதிர்கால சவால்களைப் பற்றி சிந்திக்கவும், அவற்றைச் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான நமது கூட்டுத் தீர்மானத்தைப் புதுப்பிப்பதற்குமான வாய்ப்பொன்றாகும். நமது மக்களின் ஜனநாயகத் தெரிவின் மூலம் அமைக்கப்பட்ட இந்த வலுவான அடித்தளமானது, ஒற்றுமை, ஸ்திரத்தன்மை மற்றும் பகிரப்பட்ட செழிப்புக்கான நமது தேசிய உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இன்று, இலங்கை, வேகமாக வளர்ந்து வருவதும், சர்வதேச முறைமையில் நம்பிக்கையுடன் ஈடுபடுவதுமான, அதே நேரத்தில் எமது இறையாண்மை மற்றும் தேசிய நலன்களை உறுதியாகப் பாதுகாக்கும் ஒரு வளர்ந்த மற்றும் எதிர்கால நோக்குடைய தேசத்தைக் கட்டியெழுப்ப புதுப்பிக்கப்பட்டதொரு தேசிய பயணத்தைத் தொடங்குகிறது. இப்பொறுப்பினை நாம், நமக்காக மட்டுமல்லாமல், இன்று நாம் வடிவமைக்கும் இத்தேசத்தைப் பெறவிருக்கும் எதிர்கால சந்ததியினருக்காகவும் நிலைநிறுத்துகிறோம்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, அணிசேராமை, சர்வதேச சட்டத்தை மதித்தல், அமைதியான சகவாழ்வு மற்றும் அனைத்து நாடுகளுடனும் ஆக்கபூர்வமான ஈடுபாடு ஆகியவற்றின் நீடித்த கொள்கைகளால் தொடர்ந்து வழிநடத்தப்படுகிறது. நிலைபேறான வளர்ச்சியை ஆதரிப்பதும், நமது மக்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதும் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் ஒத்துழைப்புக்கான எமது பங்களிப்பை மேம்படுத்துவதுமான கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

தித்வா சூறாவளியால் ஏற்பட்ட கடுமையானதும், பாதகமானதுமான வானிலை காரணமாக ஏற்பட்ட சமீபத்திய சவால்களை எதிர்கொண்டு, நமது மக்கள் வெளிப்படுத்திய மீள்தகைமை மற்றும் ஒற்றுமை, இலங்கையின் அசைக்க முடியாத மனப்பான்மையை மீண்டும் ஒருமுறை பிரதிபலித்துள்ளன. ஒன்றாக, வலுவானதும் மற்றும் திடமானதுமான தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப உறுதியுடன் நாம் முன்னேறுகிறோம்.

இது, கடந்த கால பின்னடைவுகளை கடந்து, புதுப்பிக்கப்பட்ட உறுதியுடன் முன்னேறிச் செல்வதற்கானதும், எதிர்வரும் தலைமுறைகளுக்கு பிரகாசமானதொரு எதிர்காலத்தைப் பெறுவதற்கானதும், அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமை மற்றும் பகிரப்பட்ட நோக்கத்துடன் ஒன்றிணைவதற்கானதுமான தருணமாகும். இச்சுதந்திர தினம் நமது உறுதியை மென்மேலும் வலுவடையச் செய்யட்டும்; நாம் பெருமையுடன் சேவை செய்யும் தேசத்திற்கான நமது அர்ப்பணிப்பை ஆழப்படுத்தட்டும்; மேலும் "வளரும் தேசம் - அழகானதொரு வாழ்க்கை" என்ற நமது பகிரப்பட்ட தொலைநோக்கை நனவாக்க நம்மை சிறப்பாக வழிநடத்தட்டும்!

**விஜித ஹேரத்**
**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்**
2026.02.04

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498 ෆැක්ස්/பெக்ஸ்/Fax No. : +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website: www.mfa.gov.lk - ඊමේල්/மின்னஞ்சல்/Email: fmo@mfa.gov.lk
විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Ministry of Foreign Affairs, Foreign Employment and Tourism, Republic Building, Colombo 01, Sri Lanka.